# உட்பகையை நிராகரிப்போம்.!
# ஐக்கியத்தை வளர்த்தெடுப்போம்!!

**அன்பான தமிழ் பேசும் மக்களே!**

முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து எமது மக்களும் விடுதலைப் போராட்டமும் புத்துயிர்த்தெழ பிரயத்தனம் செய்து கொண்டிருக்கும் இத் தருணத்தில், பல பிரிவுகளாக பிரிந்திருந்து பலவீனப்படாது, மீண்டும் எம் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எம்மாலான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஒற்றுமையாகச் செய்யத் தவறுகிறோம் என்பது மட்டுமல்ல எம்மை மேலும் மேலும் பலவீனப்படுத்தும் காரியங்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

பல கோணங்களில் இருந்து வரும் கருத்துக்களை உள்வாங்கி ஜீரணித்தலை மறுதலித்த அரசியலை நாம் முன்னெடுத்ததால் அதன் பின்விளைவுகளை வேதனையுடன் தற்போதும் அறுவடைசெய்து கொண்டிருக்கிறோம். ஆயுதத்தால் பேசவேண்டியவர்களுடன் மேசையிலிருந்து பேசினோம். மேசையிலிருந்து நட்புடன் பேசவேண்டியவர்களை ஆயுதம் கொண்டு பேசினோம்.

கடந்தகால வெற்றிகளைப் போற்றிப்பாதுகாக்கும் அதேவேளையில், இந்தப் பாரிய தவறுகளிலிருந்து நாம்தான் மீளெழ முற்படவேண்டும். மீளெழும் முயற்சியில் ஆங்காங்கே நம்பிக்கையூட்டக் கூடிய முனைப்புகளும் செயற்பாடுகளும் முளைவிடும் இத்தருணத்தில், தத்தமது பார்வையில் தவறேயாயினும், கருத்துக் கூறும் உரிமையை யாரொருவரிடமிருந்தும் எவரும் வன்முறையைப் பயன்படுத்தி பறித்துவிடும் சில தான்தோன்றிப் போக்குகளை அனுமதிக்க முடியாது.

இந்தவகையில் கடந்த 22.06.2011 அன்று காலை நியூமோல்டன் (லண்டன்) என்னும் இடத்தில் இருக்கும் வன்னியன் கடையில் வைத்து குட்டி என்று அழைக்கப்படும் சஞ்சீவ்ராஜ் என்பவர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார். இத் தாக்குதலுக்கான காரணம் அண்மையில் தீபம் தொலைக்காட்சியில் கேள்வி நேரம் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு தனது கருத்துக்களை கூறியதே. இந்தக் காட்டுமிராண்டித்தனத்தின் பின்னணியில் சமூக நலன்சார்ந்து, ராஜதந்திரமாகச் சிந்திக்கும் எந்த அறிவுபூர்வமான அமைப்புக்களும் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனாலும் கடந்தகால ஆயுதக் கலாச்சாரத்தின் மனப்பாதிப்பிலிருந்து விடுபடமுடியாத ஒருசில தனிநபர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடு இது என்று வெறுமனே ஒதுக்கிவிடவும் முடியாது. ஏனெனில் இப்போக்குகள் நாளை மீண்டுமொரு அனர்த்தத்திற்கு (மு)வாய்க்கால் அமைக்கலாம்.

இம்மாதிரியான கீழ்த்தரமான, அநாகரிகமான இழிசெயல்கள் தொடர்ந்தும் எமது சமூகத்தில் நடைபெறாது இருக்க ஒன்றுபட்ட சமூகமாய் செயற்படுவோம். **இத்தாக்குதல்தாரி பற்றிய அல்லது அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள் பற்றிய தகவல்களை அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறியத்தாருங்கள்.**

ஈழபூமி வெளியீட்டகம் -26.06.11